வெளியீடு எண். 950.

உ

சிவமயம்

தஞ்சை, சேலூர், இரும்புதல், தண்டங்குறை, சூலமங்கை

# தலச்சிறப்பும் தேவாரமும்



சம்பந்தர்



அப்பர்



சுந்தரர்

T14647
R005D06
T.14647

... ஆதீனம்] [அடக்க விலை ரூ. 1—70

1991

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்



ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண். 950.

உ

சிவமயம்

# தஞ்சை, சேலூர், இரும்புதல், தண்டங்குறை, நாலமங்கை

# தலச் சிறப்பும் தேவாரமும்

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளாணையின் வண்ணம்

"ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்"

வெளியிடப் பெற்றது.

தருமை ஆதீனம்

1991

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ
சிவமயம்

# முன்னுரை

---

திருச்சிற்றம்பலம்

அண்ணல் ஆலவாய், நண்ணி னான்தனை
எண்ணி யேதொழத், திண்ணம் இன்பமே.

— ஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் திருப்பதிகங்கள் அருளிச் செய்யப் பெற்ற தலங்கள் பாடல் பெற்ற தலங்கள் எனவும், தனித்திருப் பதிகம் இன்றி சில பாடல்களில் குறிப்பிட்டுப் போற்றப் பெற்ற தலங்கள் வைப்புத் தலங்கள் எனவும் வழங்கப் பெறும்.

சோழநாட்டில் இத்தகைய வைப்புத்தலங்கள் 75க்கும் மேற்பட்டவை உள்ளன.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

தேவாரத் தலங்களைப் போல வைப்புத் தலங்களையும் மக்கள் அறிந்து வழிபட வேண்டுமென்ற பெருங்கருணையால் மாதந்தோறும் வரும் தங்கள் ஜன்ம நக்ஷத்திரத்

திருநாளில் வைப்புத் தலங்களிலும் முறையே ஒவ்வொரு தலமாக அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தியும் அத்தலங்களின் தேவாரப் பாடல்களையும் சிறப்பையும் நூலாக அச்சிட்டு வெளியிடவும் அருளாணை பிறப்பித்தார்கள். இவ்வழிபாடு தேவாரத் தலங்களில் முறையே நிகழ்ந்து இதுபோது சோழ நாட்டு வைப்புத் தலங்களில் நிகழ்ந்து வருகிறது.


சமய அன்பர்கள் பலரும் வைப்புத்தலங்களையும் வழிபட்டுப் பயனுறும் வகையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திர விழா வழிபாட்டில் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்று இன்புறுவார்களாக.

*ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்*
*அருளாணையின்வண்ணம்*

தருமபுரம்,
3—9—1991.

**வி. சா. குருசாமி தேசிகர்,**
ஆதீனப்புலவர்.

தருமை ஆதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

குருபாதம்

## திருமை ஆதீனத்தை நிறுவியருளிய
## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம்தெரிந்திடாமல்
தாரணி அன்பரைஆள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன்எங்கோன்
காரணியும் நெடியபொழில் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன் இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— ஸ்ரீ சம்பந்தசரணாலயர்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் குலத்தில் சுப்பிரமணியப் பிள்ளைக்கும் மீனாட்சியம்மைக்கும் அருந்தவ மகவாக அவதரித்தருளினர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். மதுரையம் பதிக்குத் தம் பெற்றோருடன் சென்று குலதெய்வமாகிய ஸ்ரீ சொக்கநாதப்பெருமானைவழிபட்டார். திருவருளால் பொற்றாமரைக் குளத்தின் ஈசான மூலையில் பெட்டகக்கோயிலுடன் ஸ்ரீ சொக்கநாதர்கண்ணுக்கினிய பொருளாகக் கைவரப்பெற்றார். சொக்கேசன் அருளால் திருவாரூர் சென்று, ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகரை வணங்கிச் சிவஞானோபதேசம் பெற்றுச் சொக்கநாதர் பூஜையும் எழுந்தருளச் செய்து கொடுக்கப் பெற்றார். குருவாணைபின்படி

தருமபுரத்தில் அமர்ந்து பக்குவான்மாக்களுக்கு ஞானோபதேசம் செய்து சைவ சித்தாந்தத்தை எங்கும் பரவச்செய்தார். தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமான்மீது சொக்கநாதவெண்பாபாடித்துதித்தார். சிவபோக சாரம், முத்திநிச்சயம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப்பிரகாசமாலை, சோடசகலாப்பிராசாதசட்கம், திரிபதார்த்தரூபாதிதசகாரியஅகவல், நவரத்தினமாலை ஆகிய நூல்களையும் அருளிச்செய்தார். இவ்வாறு பல்லாண்டுக்காலம் ஞான அரசாட்சி புரிந்து சிவலிங்கத் திருவுருவின் கீழ் ஜீவசமாதி கூடினார் ஸ்ரீ குருஞானசம்பந்தர். இவர்கள் ஜீவ சமாதி கூடிய குருமூர்த்தமே தற்பொழுது ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாக விளங்கிவருகிறது. கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப் பெற்ற இத்தருமை ஆதீனம் மொழித்தொண்டும், சமயத்தொண்டும், சமூகத்தொண்டும் ஓல்லும் வகையெல்லாம் ஆற்றிவருகிறது. ஸ்ரீ குருஞானசம்பந்தர்பரம்பரையில்தற்பொழுதுஇருபத்தாறாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி இருப்பவர்கள் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** ஆவார்கள். அவர்களால் தம்து ஆதிபரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரில் நிறுவப்பெற்ற "ஞானசம்பந்தம் பதிப்பகம்" அறக் கட்டளை வெளியீடாக இந்நூல் வெளியிடப்பெற்றது.

உ
சிவமயம்

## தஞ்சை, சேலூர், இரும்புதல், தண்டங்குறை, சூலமங்கை

# தலச் சிறப்புக்கள்

சோழவள நாட்டில் உள்ள இவ்வைப்புத்தலங்கள் திருநாவுக்கரசர் சுந்தரர் தேவாரங்களில் இடம்பெற்றவை. சேலூர் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் வழிபட்டதாகக் குறிப்பிடப்பெறுவது.

## 1. தஞ்சை : (கீழைத்தஞ்சை)

இத்தலம் திருமருகலுக்கு அணிமையில் உள்ளது. மருகல் நாட்டுத் தஞ்சை எனச் சேக்கிழாரால் குறிக்கப் பெறுவது. இராஜராஜ சோழமன்னனால் எடுப்பிக்கப் பெற்ற பெருவுடையார்கோயிலைப் பெற்றதும் மாவட்டத் தலைநகராய் உள்ளதுமாகிய தஞ்சாவூர் மேலைத்தஞ்சை எனவும் அப்பெயருடைய இச்சிற்றூர் கீழைத்தஞ்சை எனவும் வழங்கப்பெறும்.

மருகல் நாட்டுத்தஞ்சை அறுபத்துமூன்று நாயன்மார்களில் செருத்துணை நாயனார் அவதாரத்தலம். 'தஞ்சை மன்னவனும் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்' எனச் சுந்தரர் இந்நாயனாரைத்திருத்தொண்டத்தொகையில் குறித்தருள்கிறார்.

சோழநாட்டின் அகநாடுகளில் ஒன்றாகிய மருகல் நாட்டைச் சேர்ந்த தஞ்சாவூரில் வேளாளர் குலத்தில் தோன்றியவர் செருத்துணையார். இவர் திருவாரூரை அடைந்து புற்றிடங்கொண்ட பெருமானைக்காலந்தோறும்

போற்றித் திருத்தொண்டுகள் பலவும் செய்து வாழ்ந்து வந்தார். ஒருநாள் கோக்கழற்சிங்கரின் உரிமைப் பெருந்தேவி திருக்கோயில் பூமண்டபத்தில் வீழ்ந்து கிடந்த புதுமலர் ஒன்றை எடுத்து மோந்ததைக்கண்டு வெகுண்டு அத்தேவியாரின்மூக்கை அரிந்தார். இவ்வாறுஉறுதிப்பணி புரிந்து இறைவன் திருவடிநீழல் எய்தி இறவா இன்பம் பெற்றார் செருத்துணையார்.

உள்ளும் புறம்பும் குலமரபின்
 ஒழுக்கம் வழுக்கா ஒருமை நெறி
கொள்ளும் இயல்பிற் குடிமுதலோர்
 மலிந்த செல்வக் குலப்பதியாம்
தெள்ளும் திரைகள் மதகுதொறும்
 சேலும் கயலும் செழுமணியும்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு
 மருகல் நாட்டுத் தஞ்சாவூர்.

என இவ்வூரைச் செருத்துணைநாயனார் புராணத்தில் சிறப்பித்துக் கூறுகின்றார் சேக்கிழார்.

செருத்துணை நாயனார் திருவுருவம் ஆலயத்தில் வழிபாட்டில் உள்ளது

இவ்வூர் அழகிய சிறிய கிராமமாக விளங்குகிறது. தஞ்சை மாவட்டத்தை நிர்வாகச் சீரமைப்பிற்காகக் கீழத் தஞ்சை மேலைத் தஞ்சை எனப் பிரித்து வழங்கினர் முன்னோர். இயல்பாகக் கீழத்தஞ்சை கீழ்ப்பகுதியிலேயே இடம் பெற்றது.

தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் தாலுகாவில் இவ்வூர் உள்ளது. திருமருகலிலிருந்து திருவாரூர் செல்லும் நகரப்பேருந்து எண் 14, 22 ஆகியவற்றில் ஏறி கீழைத் தஞ்சை பாலம் என்னும் இடத்தில் இறங்கி சிறிதுதூரம்

தெற்கு நோக்கிச் சென்றால் இவ்வூரை அடையலாம். திருமருகலிலிருந்தோ திருவாரூரிலிருந்தோ இவ்வூரை மேற்குறித்த பேருந்துகளில் அடையலாம். ஆலயம் திருப் பணி செய்யப்படவேண்டிய நிலையில் உள்ளது.

சுவாமி பெயர் ஸ்ரீ மூலநாதர். அம்பாள் பெயர் ஸ்ரீ அகிலாண்டேசுவரி.

## 2. சேலூர் : (மட்டியான்திடல்)

இவ்வூர் பாபநாசத்திலிருந்து சாலியமங்கலம் திருக் கருகாவூர்செல்லும் பேருந்துவழியில் உள்ளது. மட்டியான் திடல் என வழங்கப்பெறுகிறது. சேலூர் என இன்று வழங்கும் சிற்றூரில் ஆலயம் இல்லை. மட்டியான்திடலே சேக்கிழார் குறித்துள்ள சேலூராக இருத்தல் வேண்டும். சேலூருக்குத் தேவாரம் இல்லை.

பெரியபுராணத்தில் குறிப்பிடப் பெறும் தலமாக உள்ளது. ஞானசம்பந்தர் திருப்புள்ளமங்கை சேலூர் திருப்பாலைத்துறை திருநல்லூர் ஆகியவற்றை வழிபட்டார் எனச் சேக்கிழார் ஞானசம்பந்தர் புராணத்தில் குறிப்பிட் டுள்ளார்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் திருப்பணி பெற்று அவர்கள் குடும்பத்தினரால் ஆலயம் பரிபாலிக்கப் பெறு கிறது மிகவும் அழகிய சிறிய ஆலயம். பெருமாள் ஆலயம் முதற்பிராகாரத்தில் உள்ளது. ஆலயத்தின் எதிரே திருக் குளம் விளங்குகிறது. கருங்கல் வேலைப்பாடுகளுடன் கிழக்கு நோக்கி விளங்கும் இவ்வாலயம் நன்கு பாலிக்கப் பெறுகிறது.

சுவாமி பெயர் ஸ்ரீ கைலாசநாதர். அம்பாள் பெயர் ஸ்ரீ நித்யகல்யாணி.

பெரியபுராணைப் பாடல், நூலின் இறுதியில் பஞ்ச புராணத் தோத்திர வரிசையில் தரப்பெற்றுள்ளது.

## 3. இரும்புதல் :

இத்தலம் அப்பர் தேவாரத்தில் இடம் பெற்றுள்ளது. இரும்புதலை எனவழங்கப் பெறுகிறது. பாபநாசத்திலிருந்து சாலியமங்கலம் செல்லும் பேருந்து வழியில் உள்ளது. பேருந்து வசதிகள் உள்ளன. பெரியகிராமம். ஆலயம் பேருந்து வழியின் கீழ்பால் விளங்குகிறது. அழகிய சிறிய இவ்வாலயம் கிராமமக்களின் முயற்சியால் நன்கு திருப் பணிகள் செய்யப் பெற்றுப் பரிபாலிக்கப் பெறுகிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. எதிரே திருக்குளம் உள்ளது.

1958 இல் கண்ணுசாமி என்பவரால் திருப்பணி தொடங்கப்பட்டுப் பின் அவர் துணைவியார் இரத்தினத் தம்மாளால் திருப்பணி நிறைவேற்றப்பெற்ற கல்வெட்டும் 1987 இல் கிராம மக்களால் திருப்பணி செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம்செய்விக்கப்பெற்றகல்வெட்டும்உள்ளன.

## 4. தண்டங்குறை :

இத்தலம் தண்டாங்கோரை என வழங்கப்பெறுகிறது. குடந்தை தஞ்சைபேருந்துவழித்தடத்தில் ஐயன்பேட்டை அடுத்து இத்தலம் உள்ளது.

தண்டாங்கோரை சின்னஞ்சிறிய அழகிய கிராமம். கிழக்கு நோக்கிய சந்நிதி. அந்தணர் பலர் வாழும் அக்ரகாரத்தில் ஆலயம் உள்ளது. அழகிய திருக்குளம் ஊருக்கு அணிசெய்கிறது. ஆலயம் பழுதடைந்துள்ளது.

விநாயகர்,முருகன், சுவாமி, அம்பாள், சண்டேசர், நந்தி தேவர்க்குத்தனித்தனிவிமானங்கள் உள்ளன. கோஷ்டங்களில் தக்ஷிணாமூர்த்தி, உமாமகேசர், பிர்மா, துர்க்கை உள்ளனர்.

சுவாமி பெயர் ஸ்ரீ கைலாசநாதர். அம்பாள் பெயர் ஸ்ரீ சர்வலோகநாயகி.

## 5. சூலமங்கை

இத்தலம் பசுபதிகோயில் இரயில் நிலயத்திற்குஅருகில் உள்ளது. கோயில் இருக்கும் ஊர் சூலமங்கலம் என வழங்கப்படுகிறது. பேருந்துகளில் வருவோர் ஐயன் பேட்டை பேருந்து மாற்றுப்பாதையில் சூலமங்கலம் கைகாட்டியிலிருந்து தெற்கே 1 கீ. மீ. தூரம் வந்தால் ஆலயத்தை அடையலாம்.

அஸ்திரதேவர் தவம் செய்து வீரமும் ஆற்றலும் பெற்று சிவபெருமானின் கைச்சூலமாகும் பேறுபெற்றதலம். தைச் செவ்வாய்க் கிழமைகளில் தீர்த்தத்தில் நீராடி வழிபடுவோர்க்குச் சிறந்த வரங்களைப்பெருமான் அஸ்திரதேவர் வேண்டுகோளின் படி தந்தருள்கிறார்.

திருச்சக்கரப்பள்ளியின் சப்தஸ்தானத் தலங்களில் இத்தலமும் ஒன்றாகும். இவற்றை சப்த மங்கலத் தலங்கள் எனக்கூறுவர். திருச்சக்கரப்பள்ளிநத்திமங்கை,அரிமங்கை, சூலமங்கை, பசுபதிமங்கை, தாழமங்கை, புள்ளமங்கை என்பன அவை.

சுவாமி பெயர் ஸ்ரீ கிருத்திவாகேஸ்வரர். அம்பாள் பெயர் ஸ்ரீ அலங்காரவல்லி.

திருமால் கோயில் தனியே உள்ளது. நின்ற திருக்கோலத்தில் பெருமாள் அருட்காட்சி தருகின்றார்.

உ
சிவமயம்

# தஞ்சை

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

### க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டம்

திருச்சிற்றம்பலம்

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஓத்தூர்
உருத்திர கோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
வீரட்டம் மாதானம் கேதா ரத்தும்
வெஞ்சமாக் கூடல் மீ யச்சூர் வைகா
வேதீச்சரம் விவீச்சரம் வெற்றியூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக் கையும்
கயிலாய நாதனையே காண லாமே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

### திருநாட்டுத்தொகை

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

அழலுமேனியன் தையலொர் பாகம் அமர்ந்தவன்
தொழலும் தொல்வினை தீர்க்கின்ற சோதிசோற்றுத்துறை
கழலும் கோவை உடையவன் காதலிக் கும்மிடம்
பழனம் பாம்பணி பாம்புரம் தஞ்சைதஞ் சாக்கையே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

### திருத்தொண்டத்தொகை

பண் – கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

(செருத்துணை நாயனார் துதி)

கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனும்செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் [அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

## இரும்புதல்

### திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

### திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பா ழியார்
பெரும்பற்றப் புலியூர்மூ லட்டா னத்தார்
இரும்புதலார் இரும்பூளை யுள்ளார் ஏரார்
இன்னம்ப ரார்ஈங்கோய் மலையார் இன்சொற்
கரும்பனையாள் உமையோடும் கருகா வூரார்
கருப்பறிய லூரார் கரவீ ரத்தார்
விரும்பமரர் இரவுபகல் பரவி ஏத்த
வீழி மிழலையே மேவி னாரே.

## சூலமங்கை

### திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நறையூரிற் சித்தீச் சரம்நள் ளாறு
நாரையூர் நாகேச்சரம் நல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூல மங்கை
தோணிபுரம் துருத்தி சோமேச்சரம்
உறையூர் கடலொற்றி யூரூற் றத்தூர்
ஓமாம் புலியூர்ஓர் ஏட கத்தும்
கறையூர் கருப்பறியல் கன்றாப் பூரும்
கயிலாய நாதனையே காண லாமே.

## தண்டங்குறை (தண்டாங்கோரை)

### சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

பண் – இந்தளம்

திருச்சிற்றம்பலம்

அண்டத் தண்டத்தின் அப்புறத் தாடும் அமுதன் ஊர்
தண்டந் தோட்டம்தன் டங்குறை தண்டலை யாலங்காடு
கண்டல் முண்டல்கள் சூழ்கழிப் பாலை கடற்கரை
கொண்டல் நாட்டுக்கொண் டல் குறுக்கை நாட்டுக்குறுக் [கையே.

## திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

(சேலூர்)

மன்னும் அக்கோயில்சேர் மான்மறிக் கையர்தம்
பொன்னடித் தலம்உறப் புரிவொடும் தொழுதுஎழுந்து
இன்னிசைத் தமிழ்புனைந்து இறைவர் சேலூருடன்
பன்னுபாலைத்துறைப் பதிபணிந் தேகினார்.

## செருத்துணைநாயனார் துதி

கழிநீள் கடல்நஞ் சயின்றார்க்கு இருந்த கடிமலரை
மொழிநீள்புகழ்க்கழற்சிங்கன்தன்தேவிமுன் மோந்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந்தான் என்று இயம்புவரால்
செழுநீர்மருகல் நன்னாட்டுஅமர்தஞ்சைச்செருத்துணையே.

## முத்தித் தலங்கள்

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றம்மறைக் காடுஅருணை காளத்தி
வாஞ்சியம்என் முத்தி வரும்.

## சிவதரிசன பலன்

காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்-மாலை
வந்துசிவன்தாளைவந்தித்தால்ஏழ்பிறப்பின்[யினில்
வெந்துயரம் எல்லாம் விடும்.

## கும்பாபிஷேகப் பலன்

கும்பாபிஷேகம் பெருஞ்சாந்தி எனப் பெயர்பெறும். திருஞானசம்பந்தர் சிறந்த ஆலய விழாக்களைக் குறித்து அருளிச்செய்த பூம்பாவைத் திருப்பதிகத்தில் பெருஞ் சாந்தி விழாவைக் கண்டுகளிக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். கும்பாபிஷேகம் செய்தல், செய்வித்தல், துணைபுரிதல், கண்டுகளித்தல் ஆகியன மிக்க சிவ புண்ணியத்தை நமக்கு ஈட்டித்தரும் சிறப்புடையன. பெருஞ்சாந்தி விழாவைச் செய்பவர், செய்விப்பவர், காண்பவர்கள் இருமை இன்பங்களையும் எய்தி இன்புறு வார்கள்.

உ
சிவமயம்

## திருவிளக்கு

'கோயில்விளங்கக்குடிவிளங்கும்' என்பது பழமொழி. திருக்கோயிலுக்குச் செல்வோர் தம்மால் இயன்ற பூசைப் பொருள்களை உதவுதல் சிறந்த சிவபுண்ணியத்தைத்தரும். அவற்றுள் திருவிளக்கு இடுதல் மேலான ஞானத்தை அளிக்கும். "விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினால் இடவல்லார்க்குக் கரும்பினில் கட்டிபோல்வார்" இறைவர் எனவும், "விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" எனவும் தேவாரத் திருமுறை கூறுகிறது.

## அபிஷேகப் பொருள்களும் அவற்றின் பயனும்

எண்ணெய் – சுகம். மாப்பொடி – கடன்தீரல். நெல்லிமுள்ளி– நோய்நீக்கம். மஞ்சட்பொடி – வசீகரம். பஞ்சகவ்வியம் – தூய்மை. பஞ்சாமிர்தம் – ஜயம். பால் – ஆயுள். தயிர் – மக்கட்பேறு. நெய் – முத்தி. தேன் – சுகம். கரும்பின்சாறு – பிணிநீக்கம். வாழைப்பழம் – பயிர் விளைவு. எலுமிச்சை முதலியன – எமபயம் போக்கல். இளநீர் – போகம். சந்தனம், பன்னீர் – லட்சுமிகரம். கும்பம் – குற்றங்கள் தீரல்.

### பஞ்ச வில்வங்கள்

வில்வம், கிளுவை, மாவிலிங்கை, விளா, நொச்சி ஆகியவற்றின் பத்திரங்கள்.

### அஷ்ட புஷ்பங்கள்

எருக்கு, தாமரை, புன்னை, நந்தியாவர்த்தம், பாதிரி, அரளி, சண்பகம், நீலோற்பலம் மலர்கள்.